DMCJM COURT KUNNAM

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM**

| **C.C.No. 110 /2025, Mangalamedu P.S. PW -1.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கருணாநிதி | Caste | : | - |
| Father/ Husband Name | : | கருப்பையா | Calling | : | விவசாயம் |
| Village | : | நமையூர் | Religion | : | - |
| Taluk | : | குன்னம் | Age | : | 72 /2025 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 19.01.2026 | | | | | |

Accused Present.

**அரசு தரப்பு முதல் விசாரணை** :-

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். என்னுடைய 3 –வது மகன் பாண்டுரங்கன் என்பவர் கடந்த 24.03.2024 ம் தேதி அன்று சின்னாறு சர்க்கரை ஆலை ஆர்ச் அருகே உள்ள சிங்கப்பூர் முடிதிருத்தும் கடைக்கு முடி திருத்துவதற்காக ஸ்கூட்டார் வாகனத்தில் சென்றார். அவர் வாகனத்தில் வந்தபோது எதிர் புறமாக வந்த பெரிய பைக் ஒன்று மோதி விபத்து ஏற்படுத்தியதில் என் மகனுக்கு தலையில் அடிப்பட்டது. பின்னர் அவரை பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலமாக சிகிச்சைக்கு அழைத்து சென்றோம். பெரிய பைக் ஓட்டிய நபர் பெயர் எனக்கு தெரியாது. மேல் சிகிச்சைக்காக காயமடைந்த திருச்சியில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தேன். அங்கு 3 நாட்கள் சிகிச்சை பலனின்றி அவர் இறந்துபோய்விட்டார். போலிசாரிடம் சம்பவம் குறித்து புகார் ஒன்று கொடுத்தேன். அந்த புகாரும் அதில் உள்ள கையெழுத்தும் என்னுடைதுதான். **புகார் அ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை** :–

1. விபத்து சம்பந்தமாக எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் எனக்கு நேரடியாக தெரியாது. போன் மூலமாக தகவல் கிடைத்துதான் வந்தேன். புகாரை நான் விபத்து நடந்த அன்றே கொடுத்தேனா என்றால் இல்லை 3 ம் நாள் தான் கொடுத்தேன். புகாரில் எழுதியது யார் என்றால் பெயர் எனக்கு தெரியாது, காவல் நிலையத்தில் சொல்லி எழுதினார்கள். அதில் நான் கையெழுத்து போட்டேன். புகாரில் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எனது மகனுக்கு ஒரு கை

பிளாஸ்டிக் கை என்றால் சரிதான். எனது மகனுக்கு இருசக்கர வாகன் ஓட்டுவதற்கு லைசென்ஸ் வச்சிருந்தாரா என்றால் எனக்கு தெரியாது. எனது மகன்தான் அவரது பைக்கை அதிவேகமாகவும், கவனக்குறைாவகவும் ஓட்டிவந்து மற்றொரு பைக்கில் பின்புறம் மோதி விபத்தை ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இலலை என்றாலும், இறந்து போன என் மகனுக்கான இழப்பீடு பெறுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMC CUM JM COURT, KUNNAM

DM CUM COURT, KUNNAM

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM**

| **C.C.No. 110 /2025, Mangalamedu P.S. PW -2.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ராஜு | Caste | : | - |
| Father/ Husband Name | : | செங்கமலை | Calling | : | விவசாயம் |
| Village | : | அகரம் கிராமம் | Religion | : | - |
| Taluk | : | வேப்பந்தட்டை | Age | : | 58 /2026 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 19.01.2026 | | | | | |

Accused Present.

**அரசு தரப்பு முதல் விசாரணை** :-

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1–வது கையெழுத்து என்னுடையதுதான். 2–வதாக ரவி என்பவர் கையெழுத்து செய்துள்ளார். மேற்படி கையெழுத்தை 2 1/2 ஆண்டுகளுக்கு முன்பாக 3–ம் மாதத்தில் 25 ம் தேதி செய்து கொடுத்தேன். அதனை போலிசார் காவல் நிலையத்தில் பெற்றார்கள். பகல் 12 மணி இருக்கும். எறையூர் அருகே உள்ள ஆர்ச் அருகே விபத்து நடந்தது குறித்து விசாரித்தார்கள். **பார்வை மகசரில் கண்டுள்ள 1–வது கையெழுத்து அ.த.சா.ஆ 2 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை** :–

1. நான் கையெழுத்து செய்து கொடுத்த பேப்பரில் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி கையெழுத்தை நான் காவல் நிலையத்தில் வைத்துதான் போட்டுக் கொடுத்தேன். இறந்துபோனவர் எனது உறவினர் என்றால் சரிதான். இறந்துபோனவர் எனது உறவினர் என்பதால் போலிசார் கேட்டுக்கொண்டதிற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMCUMCOURTKUNNAM

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM**

| **C.C.No. 110 /2025, Mangalamedu P.S. PW -3.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ரவி | Caste | : | - |
| Father/ Husband Name | : | அருணாசலம் | Calling | : | அரசு குடோன் பணியளார் |
| Village | : | நமையூர் கிராமம் | Religion | : | - |
| Taluk | : | குன்னம் | Age | : | 48 /2026 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 19.01.2026 | | | | | |

Accused Present.

**அரசு தரப்பு முதல் விசாரணை** :-

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து பெரம்பலூர் அரசி குடோனில் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2-வது கையெழுத்து என்னுடையதுதான். 1-வதாக தற்போது சாட்சி சொல்லி சென்ற நபர் கையொப்பம் செய்தார். . மேற்படி கையெழுத்தை சுமார் 1 1/2 ஆண்டுகளுக்கு முன்பு விபத்து நடந்த இடமான சின்னாறு சலூன் அருகே செய்து கொடுத்தோம். மாதம் தேதி நேரம் எனக்கு நினைவில்லை. **பார்வை மகசரில் கண்டுள்ள 2-வது கையெழுத்து அ.த.சா.ஆ 3 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

(அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க **சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக** கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கபட்டார்).

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை** :-

1. போலிசார் விசாரணையில் கடந்த 25.03.2024 ம் தேதி அன்று பகல் 12.45 மணியளவில் பார்வை மகசரில் 2-வது கையொப்பம் செய்ததாக வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :-

1. நான் கையெழுத்து செய்து கொடுத்த பேப்பரில் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி கையெழுத்தை நானும் எனக்கு முன்னர் சாட்சி சொன்ன ராஜு என்பவரும் சம்பவம் நடந்த இடத்தில் வைத்துதான் போட்டுக் கொடுத்தோம் என்றால் சரிதான். இறந்துபோனவர் எனது உறவினர் என்றால் அவர் எனக்கு அண்ணன் உறவு ஆவார். இறந்துபோனவர் எனது உறவினர்

என்பதால் போலிசார் கேட்டுக்கொண்டதிற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMCUMJM COURT, KUNNAM

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM**

| C.C.No. 110 /2025, Mangalamedu P.S. PW -4. | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பழனிசாமி | Caste | : | - |
| Father/ Husband Name | : | கருப்பையா | Calling | : | கூலி |
| Village | : | மங்களம் | Religion | : | - |
| Taluk | : | வேப்பந்தட்டை | Age | : | 50 /2026 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 19.01.2026 | | | | | |

Accused Present.

**அரசு தரப்பு முதல் விசாரணை** :-

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது அண்ணன் ஆவார். அவருடைய மகன் பாண்டுரங்கன் என்பவர் கடந்த 24.03.2024 ம் தேதி மாலை 7 மணியளவில் சின்னாறில் உள்ள சிங்கப்பூர் சலூன் எதிரே சாலை விபத்தில் மற்றொரு இருசக்கர வாகனம் பாண்டுரங்கன் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்ப்பட்டதில் அவருக்கு காயம் ஏற்பட்டு திருச்சி தனியார் மருத்துவமனையில் 3 நாட்கள் சிகிச்சையில் இருந்து சிகிச்சை பலனின்றி பின்னர் இறந்துபோனார். அ.சா.1 புகார் கொடுத்ததன்பேரில் போலிசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டார்கள். பிரேத விசாரணை மேற்கொண்டார்கள். என்னை போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :–

1. விபத்து சம்பந்தமாக யார் புகார் கொடுத்தார் என்றால் என்னுடைய அண்ணன் கொடுத்தார். விபத்து நடந்த அன்றே புகார் கொடுத்தார். புகாரை யார் எழுதி கொடுத்தார் என்றால் புகாரை காவல் நிலையத்தில் உள்ள பொது நபர்கள் எழுதி கொடுத்தார்கள். என் அண்ணனுக்கு எழுத தெரியாது. விபத்து குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இறந்துபோனவர் அண்ணனின் மகன் என்பதால் விபத்து காப்பீடு பெறவேண்டி அ.சா.1 க்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

| |
|---|
| Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.<br><br>District Munsif - Cum - Judicial Magistrate,<br>Kunnam. |

DMC,JMCOURT,KUNNAM

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM**

| **C.C.No. 110 /2025, Mangalamedu P.S. PW -5.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **முருகானந்தம்** | Caste | : | - |
| Father/ Husband Name | : | **கணேசன்** | Calling | : | **கூலி** |
| Village | : | **நமையூர்** | Religion | : | - |
| Taluk | : | **குன்னம்** | Age | : | 41 /2026 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 19.01.2026 | | | | | |

Accused Present.

**அரசு தரப்பு முதல் விசாரணை** :-

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது பெரியப்பா ஆவார். அவருடைய மகன் பாண்டுரங்கன் என்பவர் கடந்த 24.03.2024 ம் தேதி மாலை 7 மணியளவில் சின்னாறில் உள்ள சிங்கப்பூர் சலூன் எதிரே சாலை விபத்தில் மற்றொரு இருசக்கர வாகனம் பாண்டுரங்கன் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்ப்பட்டதில் அவருக்கு காயம் ஏற்பட்டு திருச்சி தனியார் மருத்துவமனையில் 3 நாட்கள் சிகிச்சையில் இருந்து சிகிச்சை பலனின்றி பின்னர் இறந்துபோனார். அ.சா.1 புகார் கொடுத்ததன்பேரில் போலிசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டார்கள். பிரேத விசாரணை மேற்கொண்டார்கள். என்னை போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :–

1. விபத்து சம்பந்தமாக யார் புகார் கொடுத்தார் என்றால் என்னுடைய பெரியப்பா கொடுத்தார். விபத்து நடந்த அன்றே புகார் கொடுத்தார். புகாரை யார் எழுதி கொடுத்தார் என்றால் புகாரை காவல் நிலையத்தில் உள்ள பொது நபர்கள் எழுதி கொடுத்தார்கள். விபத்து குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. இறந்துபோனவர் பெரியப்பாவின் மகன் என்பதால் விபத்து காப்பீடு பெறவேண்டி அ.சா.1 க்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMC COURT KUNNAM

## DEPOSITION OF WITNESS

## IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM

| **C.C.No. 110 /2025, Mangalamedu P.S. PW -6.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **கண்ணதாசன்** | Caste | : | - |
| Father/ Husband Name | : | **கதிர்வேல்** | Calling | : | **தனியார் நிறுவன ஊழியர்** |
| Village | : | **நமையூர்** | Religion | : | - |
| Taluk | : | **குன்னம்** | Age | : | 31 /2026 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 19.01.2026 | | | | | |

Accused Present.

**அரசு தரப்பு முதல் விசாரணை** :-

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து தனியார் நிறுவன ஊழியர் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது அத்தை வீட்டுக்காரர் ஆவார். அவருடைய மகன் பாண்டுரங்கன் என்பவர் கடந்த 24.03.2024 ம் தேதி மாலை 7 மணியளவில் சின்னாறில் உள்ள சிங்கப்பூர் சலூன் எதிரே சாலை விபத்தில் மற்றொரு இருசக்கர வாகனம் பாண்டுரங்கன் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டதில் அவருக்கு காயம் ஏற்பட்டு முதலில் பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டு பின்னர் திருச்சி தனியார் மருத்துவமனையில் 3 நாட்கள் சிகிச்சையில் இருந்து சிகிச்சை பலனின்றி பின்னர் இறந்துபோனார். அ.சா.1 புகார் கொடுத்ததன்பேரில் போலிசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டார்கள். பிரேத விசாரணை மேற்கொண்டார்கள். என்னை போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :–

1. விபத்து சம்பந்தமாக யார் புகார் கொடுத்தார் என்றால் என்னுடைய அத்தை வீட்டுக்காரர் கொடுத்தார். விபத்து நடந்த அன்றே புகார் கொடுத்தார். புகாரை யார் எழுதி கொடுத்தார் என்றால் புகாரை காவல் நிலையத்தில் உள்ள பொது நபர்கள் எழுதி கொடுத்தார்கள். விபத்து குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. இறந்துபோனவர் அத்தையின் மகன் என்பதால் விபத்து காப்பீடு பெறவேண்டி அ.சா.1 க்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMC, KUNNAM